7 ஆகஸ்ட் 2022

# Newtec

NEW WAY OF BEING CHURCH

பொதுக்காலம் ஆண்டின் 19 ஆம் ஞாயிறு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்:

**அன்னை மரியாவின் விண்ணேற்பு விழா (ஆகஸ்ட் 15)**

## இறைவேண்டலில் விழிப்பாயிருங்கள்

பாஸ்கா இரவில் எகிப்தைவிட்டு புறப்பட்ட கடவுளின் மக்களின் நம்பிக்கையால் நாமும் தூண்டப்படுகிறோம். இன்றைய முதல் வாசகத்தில் கடவுள் அவர்களுக்கு கொடுத்த வாக்குறுதியையும், விரைவில் அவர்களின் எதிரிகள் வீழ்ச்சியடைந்து அவர்கள் மீட்கப்படுவார்கள் என்ற செய்தியையும் அவர்கள் விடாதுப் பற்றிகொண்டனர் என்று வாசிக்கின்றோம்.



கடினமான சூழல்கள் மற்றும் துன்பங்களை எதிர்கொள்ளும்போது, கடவுள் மீது நாம் கொண்டுள்ள ஆழ்ந்த நம்பிக்கையின் மூலம் நாம் அதிலிருந்து உயர்த்தப்படுகிறோம். நாம் கொண்டிருக்கும் கிறிஸ்துவ நம்பிக்கை, மதிப்பீடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் நம்வாழ்க்கையில் கடினமான முடிவுகளை எடுக்கிறோம். பெரும்பாலான நேரங்களில் அது நம்மை எங்கு அழைத்துச் செல்லும் என்று நமக்குத் தெரியாது; ஆனால் நம்முடைய நம்பிக்கை ஆண்டவரில் உள்ளது. மேலும் இரண்டாவது வாசகத்தில் ஆபிரகாம், சாரா, ஈசாக்கு, யாக்கோபு, ஏசாயு மற்றும் யோசேப்பு மோசே ஆகியோர் கொண்டிருந்த நம்பிக்கையை நமக்கு நினைவூட்டி நாம் கடவுளிடம் முழு நம்பிக்கையுடன் இருக்கவேண்டும் என்று பவுல் விரும்புகிறார். அந்த நம்பிக்கை தான் அவர்களுக்கு வெகுமதி அளித்தது; அவர்கள் அனைவரும் இறைவனின் அருளைப் பெற்றது அவர்கள் எதிர்பார்த்திருந்த காலத்தில் அல்ல; கடவுள் தந்த காலத்தில் தான் கடவுளின் அருளைப் பெற்றுக்கொண்டனர்.

பயப்படவேண்டாம் என்று மீண்டும் மீண்டும் கூறும் இயேசு, விண்ணக அருளை நமக்குத் தருவதில் தந்தை மிகவும் மகிழ்ச்சியடைகிறார் என்று கூறுகிறார். அழிந்துபோகாத, யாரும் பறித்துகொள்ளமுடியாத ஆன்மீக செல்வங்களைச் சேர்த்துவைக்குமாறு கூறுகிறார். இன்றைய நற்செய்தியில் இரண்டு உவமைகளை நமக்குத் தருகிறார். முதல் உவமையில், அவர் மீண்டும் வரும் நாளுக்காக நாம் எப்போதும் விழிப்புடன் இருக்குமாறும் அவ்வாறு வரும்போது, நாம் அவரை கைநழுவ விடக்கூடாது என்றும் கூறுகிறார். இரண்டாவது உவமையில் உள்ள செய்தியும் விழிப்புணர்வு தான். இதில் திருஅவை மற்றும் சமூகங்களின் பணியாளர்களாக நாம் எப்போதும் விழிப்பாய் இருக்குமாறு அழைக்கிறார். விழிப்பாய் இருப்பது என்பது கிறிஸ்துவின் போதனைகளுக்கு தொடர்ந்து கீழ்ப்படிவதும், நற்குணங்களோடு தொடர்ந்து வாழ்வதும் ஆகும்.

கிறிஸ்து மீண்டும் வரும்போது நமக்கு எப்படியிருக்கும்? நம்முடைய வாழ்க்கையை எவ்வாறு வாழ்ந்தோம் என்று அவருக்குக் கணக்கு கொடுக்க நாம் தயாரா? அல்லது ஒருவேளை, பொருளாசையினாலும், அதிகாரத்தினாலும், குடிவெறியினாலும், நம்மிடையே அவரைக் காணத் தவறிவிட்டோமா?

நாம் அவருடன் விண்ணகத்தில் இருப்பதையே இயேசு விரும்புகிறார். நாம் எப்போதும் கவனத்துடன் இருக்கவேண்டும். இறைவேண்டலிலும், பிறருக்குப் பணி செய்வதிலும் கவனமாய் இருக்க வேண்டும். இவ்வாறு நாம் வாழ்ந்தோமென்றால், அவரின் இரண்டாம் வருகையின்போது அவரை வரவேற்க நாம் தயாராய் இருப்போம்.

இவற்றைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திப்போம். இறைவன் மீண்டும் வரும்போது, அவரை நான் எவ்வாறு அடையாளம் கண்டுகொள்வது? ஆன்மீக செல்வங்களை நாம் எவ்வாறு அடைவது? அவர் தரும் விருந்தில் அந்த பந்தியில் அமர, நான் சரியான பாதையில் தான் செல்கின்றேனா? என்று சிந்திப்போம்.

**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

நம்பிக்கையில் நிலைத்திருங்கள்; துணிவுடன் நடந்துகொள்ளுங்கள்; வலிமையுடன் செயல்படுங்கள்.

(1 கொரிந்தியர் 16:13)

**இன்றைய வாசகங்கள்:**

சாலமோனின் ஞானநூல்: 18: 6-9;

திபா: 33: 1,12, 18-20, 22;

எபி: 11: 1-2, 8-19 (அ) 1-2, 8-12;

லூக்: 12: 32-48 (அ) 35-40.

INTERNAL CIRCULATION ONLY
BUL 32/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org